[*2024 ஜூன் 28*

3. அரசினர் தனித் தீர்மானம்

பேரவை நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிக்கவும், நீட் தேர்வு முறை கைவிடப்படும் வகையில் தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளவும் ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலும், பல்வேறு பொது சுகாதாரக் குறியீடுகளிலும் நாட்டிற்கே முன்னோடியாக நம்முடைய தமிழ்நாடு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல ஆண்டுகளாக நமது தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட சிறப்பான மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை முறைதான் இந்தச் சாதனைகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. முனைவர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் தொழிற் பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை இரத்து செய்து இந்தச் சாதனைகளுக்கு அடித்தளம் அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–25

பள்ளிக் கல்வி மதிப்பெண்களின் அடிப்படையில், சமூக நீதியையும், அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கு சமவாய்ப்பையும் உறுதி செய்யக்கூடிய முன்னோடி சேர்க்கை முறையை நாம் பின்பற்றி வருகிறோம். இந்த முறையால்தான் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மருத்துவர்கள் உருவாகவும், அனைத்துப் பகுதிகளுக்கும் சிறப்பான மருத்துவச் சேவைகளை வழங்கிடவும் முடிந்தது. ஆனால், 2017 ஆம் ஆண்டில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வை ஒன்றிய அரசு கட்டாயமாக்கிய பின்பு, இந்த நிலை முற்றிலும் மாறி, மருத்துவப் படிப்பு என்பது ஏழையெளிய மாணவர்களுக்கு எட்டாக்கனி ஆகிவிட்டது. பயிற்சி வகுப்புகளுக்குச் செல்ல முடியாத கிராமப்புற, ஏழையெளிய மாணவர்களால் இந்தத் தேர்வில் வெல்ல இயலாது. அதுமட்டுமல்ல; கிராமப்புறப் பகுதிகளிலும்

2024 ஜூன் 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

பின்தங்கிய பகுதிகளிலும் வழங்கப்படும் மருத்துவச் சேவைகளையும் எதிர்காலத்தில் இந்த முறை பாதிக்கும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், நீட் நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே, அதனை அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். தி.மு.க. சார்பில் மட்டுமல்ல; கழக இளைஞரணி சார்பிலும் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக, மாணவர் அணியையும், மருத்துவர் அணியையும் ஒருங்கிணைத்து, "நீட் விலக்கு-நம் இலக்கு" என்ற மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. இவற்றையெல்லாம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள் தன்னுடைய பரிந்துரையில் விரிவாக எடுத்துச் சொல்லியிருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

நீட் தேர்வு விவகாரத்தில் தமிழ்நாட்டு மக்கள், அரசியல் கட்சிகள், சமூகச் சிந்தனையாளர்கள் என அனைவரிடமும் அசைக்கமுடியாத கருத்தொற்றுமை நிலவி வருகிறது. இதனடிப்படையில், ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஏ.கே. இராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இந்தச் சட்டமன்றப் பேரவையில் *13-9-2021* அன்று தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், *2021* என்ற சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகும் மாண்புமிகு ஆளுநரால் அதற்கான ஒப்புதல் வழங்கப்படாமல், மறுபரிசீலனை செய்திட திருப்பி அனுப்பப்பட்டது.

இந்நிலையில், என் தலைமையில் *5-2-2022* அன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவினை மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்துவது தொடர்பான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, *8-2-2022* அன்று சட்டமுன்வடிவு மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஒன்றிய அரசுக்கு மாண்புமிகு ஆளுநரால் அனுப்பப்பட்டு, இதுகுறித்து ஒன்றிய அரசால் கோரப்பட்ட அனைத்து விளக்கங்களுக்கும் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் உரிய பதில்களை வழங்கியுள்ள நிலையிலும், இதற்கு ஒப்புதல் அளிக்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தி வருகிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2024 ஜூன் 28

இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற நீட் தேர்வின்போது அரங்கேறியுள்ள சம்பவங்கள், போட்டித் தேர்வுகளின்மீது நமது மாணவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையே நிலைகுலையச் செய்துள்ளன.

இதுவரை இருந்திராத அளவிற்கு, அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றது.

தேர்வுகள் காலதாமதமாகத் தொடங்கியதாகக் காரணம் காட்டி, விதிகளில் இல்லாத முறையில் கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. இதற்கு எதிர்ப்புகள் கிளம்பியதால், இந்தக் கருணை மதிப்பெண்கள் இரத்து செய்யப்பட்டு, இவர்களுக்கு மறுதேர்வு நடத்தப்பட்டது.

பல்வேறு தேர்வு மையங்களில் தேர்வுக்கு முன்னரே வினாத்தாள் வெளியானதாக தகவல்கள்.

தேர்வு மையத்தில், தேர்வுக் கண்காணிப்பாளரே விடைத்தாள்களை நிரப்பிய ஊழல் எனக் குவிந்துள்ள பல்வேறு குற்றச்சாட்டுகள், பல ஆண்டுகாலம் உழைத்து, பெரும் தொகை செலவழித்து, இந்தப் போட்டித் தேர்வுக்குத் தயாரான மாணவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக மறுத்து, தவறே நடைபெறவில்லை என்று கூறிய ஒன்றிய அரசு, பின்பு மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் குட்டு வாங்கிய பின்னரே, இந்தத் தேர்வை நடத்தும் NTA அமைப்பின் தலைவரை மாற்றியுள்ளது. தேர்வு முறைகேடுகள் குறித்து எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு ஆணையிட்டுள்ளது. முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டு காலமாக நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் தனியே போர் தொடுத்து வந்த நிலையில், நீட் தேர்வின் உண்மையான அவல நிலையை உணர்ந்து, பல்வேறு மாநிலங்களிலும் இதற்கு எதிரான எதிர்ப்பு கிளம்பி வருகின்றது. தமிழ்நாட்டின் குரல் இன்று இந்தியாவின் குரலாக நாடு முழுவதும் எதிரொலிப்பதை அண்மை நிகழ்வுகள் காட்டுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2024 ஜூன் 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

முற்பகல் 10–30

"மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை மாநில அரசுகளே முடிவெடுத்த பழைய நிலையை மீண்டும் கொண்டு வர வேண்டும்" என மாண்புமிகு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள், பிரதமருக்கே கடிதம் எழுதியுள்ளார். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள், உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. அகிலேஷ் யாதவ், பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ் என பலரும் நீட் தேர்வை இரத்து செய்ய வலியுறுத்தி, கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு பெற நாம் எடுத்த முயற்சிகளை வெற்றியடையச் செய்யவும், தேசிய அளவில் நீட் தேர்வை அறவே அகற்றிடவும் தேவையான முன்னெடுப்பாக, இந்த மாமன்றம் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீர்மானம்

"கிராமப்புற, ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கல்வி வாய்ப்புகளைக் கடுமையாகப் பாதிக்கும் வகையிலும், பள்ளிக் கல்வியை அவசியமற்றதாக்கும் வகையிலும், மாநில மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் உரிமையை மாநில அரசுகளிடம் இருந்து பறிக்கும் வகையிலும் அமைந்துள்ள நீட் தேர்வு முறை அகற்றப்பட வேண்டும்.

இந்தத் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்து, பள்ளிக் கல்வியில் மாணவர்கள் பெறும் 12–வது வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்வதற்காக, இந்தச் சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வேண்டுமென்றும், (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து பல முறைகேடுகளுக்கு வழிவகுத்து வரும் இந்தத் தேர்வு முறையை பல்வேறு மாநிலங்களும் தற்போது எதிர்த்து வரும் நிலையில், தேசிய அளவில் நீட் தேர்வு முறை கைவிடப்படும் வகையில் தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் தமிழ்நாடு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2024 ஜூன் 28

சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த அரசினர் தனித் தீர்மானத்தின்மீது பேச வருகின்ற மாமன்ற உறுப்பினர்கள், காலத்தின் அருமை கருதி—இன்று நான்கு முக்கிய மானியக் கோரிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. மாண்புமிகு நான்கு அமைச்சர்களும் பதில் சொல்ல வேண்டியிருப்பதால்—சுருக்கமாக, ஏற்கெனவே நீட் தேர்வு விலக்கு குறித்து பல விவாதங்களை இந்த மன்றம் கண்டிருக்கின்றது. ஆகவே, அதை மனதில் வைத்து சுருக்கமாக ஒவ்வொருவரும் நன்றி தெரிவிக்கின்றவண்ணமும், தீர்மானத்தை நிறைவேற்றும்வண்ணமாகவும் நீங்கள் பேச வேண்டுமென்று அன்போடு அழைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளிய மாணவர்களை மருத்துவக் கல்விக்கு நுழையவிடாமல் தடுக்கின்ற ஒரு தேர்வுதான் நீட் நுழைவுத் தேர்வு. இதை இந்தியாவிலேயே முதன்முதலாக எதிர்த்தது நம்முடைய தமிழகம்; நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஆனால், தொடர்ந்து இந்த நீட் தேர்வுப் பயிற்சியை நடத்தி தனியார் பயிற்சி நிறுவனங்கள் கோடிக் கணக்கில் கொள்ளையடித்தும், ஏழை, எளிய மாணவச் செல்வங்கள் நீட் பயிற்சி மையத்திற்குச் செல்ல முடியாத ஒரு சூழலும் அவர்களுடைய மருத்துவக் கனவைப் பொய்யாக்கி வந்த இந்தச் சூழலிலும், தொடர்ச்சியாக நாம் சட்டம் இயற்றியும், தீர்மானம் நிறைவேற்றியும் ஒன்றிய அரசிற்கு அனுப்பி வைத்தும், ஒன்றிய அரசு அதுகுறித்து கிஞ்சித்தும் கவலைகொள்ளவில்லை. நாம் இயற்றிய சட்டத்திற்கு அனுமதியளிக்க வேண்டிய இந்திய நாட்டின் ஜனாதிபதி அவர்களும் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

தற்போது, இந்தியா முழுக்க இந்த நீட் தேர்வுக்கான வினாத்தாள் வெளியாகி, ஒரு வினாத் தாளை ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சம் வரை வாங்கி 600-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தத் தேர்வை எழுதியதாக, அவர்களுடைய தேர்வுகள் இன்றைக்கு இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, இந்த ஆண்டு PG-க்கான தேர்வு எழுதும் மையத்திற்கு இங்கிருந்து தமிழ்நாட்டு மாணவர்கள் online-ல் apply செய்தபோது அது

2024 ஜூன் 28] [திரு. தி. வேல்முருகன்]

கிடைக்காமல், பல மாணவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று எழுத வேண்டிய சூழல் ஏற்பட்டது. இந்த ஆண்டு என்னுடைய மகள் உட்பட எனது உறவினர்கள் 5 பேர் அதற்கு முயற்சி மேற்கொண்டபோது online-ல் இடம் கிடைக்கவில்லை. ஹைதராபாத்திற்கு விமானத்திலே சென்று அங்கே தங்கி தேர்வு மையத்திற்குச் செல்கின்ற சூழலில் தேர்வு இரத்து செய்யப்பட்டிருப்பதாக இரவு 10.30 மணிக்கு அறிவித்திருக்கிறார்கள்; மாணவர்களுக்குத் தெரியவில்லை. தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் தமிழ்நாட்டிலேதான் UG, PG போன்ற தேர்வுகளை எழுதுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்குகின்ற நம்முடைய அரசு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுகளை—குறிப்பாக Group IV-க்கு 20 இலட்சம் பேர் நம்முடைய அரசுப் பள்ளிகளில், தனியார் பள்ளிகளில், கல்லூரிகளில்—எழுதுவதற்கு மிகக் கட்டுப்பாடாக, ஒழுக்கமாக, மிகச் சிறப்பாக இதுபோன்ற போட்டித் தேர்வுகளை நடத்துவதற்கு வாய்ப்பிருக்கிற நம்முடைய மாநிலத்தில், ஏன் சில இலட்சம் மாணவர்கள் நீட் தேர்வை, UG, PG-ஐ தமிழ்நாட்டிலே எழுதுவதற்கு அனுமதிக்கப்படவில்லை?

முற்பகல் 10-35

இவர்கள் வைக்கின்ற தேர்வுகள்கூட, நம்முடைய மாணவர்களுக்கு மன உளைச்சலை உருவாக்கியுள்ளது. 16 வயது நிரம்பிய ஒரு பெண் பிள்ளை, தாயோடும், தந்தையோடும் இதர மாநிலங்களுக்குச் சென்று எந்த இடத்தில் hotel எடுப்பார்கள்? எங்கு தேர்வு நடக்கிறதென்று சென்று தேடிக் கண்டுபிடித்து, அவர்கள் அங்கு சென்று தேர்வு எழுதுவதற்குள்ளாகவே அம்மாணவர்கள், மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். அந்த எண்ணிக்கை குறைய வேண்டும், அந்த இடங்களை வேறு மாநில மாணவர்களைக் கொண்டு நிரப்பிட வேண்டும் என்ற மிகப் பெரிய சதியும் அதில் அடங்கியிருக்கிறது.

இரண்டாவதாக, இன்றைக்கு PG-முதுகலை மருத்துவப் படிப்பிற்காகவும், அதற்கும் மேல் இருக்கின்ற உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளான, ortho, இருதயம், மூளைச் சாவு அடைந்தவர்களுக்கான மறு சிகிச்சை போன்ற Super Speciality மருத்துவர்களுக்கு இந்தியாவிலேயே அதிக இடங்கள் இருப்பது, Stanley, MMC போன்ற அதிக அளவிலான அரசு மருத்துவக்

[திரு. தி. வேல்முருகன்] [2024 ஜூன் 28

கல்லூரிகள் இருப்பது தமிழ்நாட்டில்தான். இவற்றில், உயர் படிப்புகளுக்கு மொத்தம் 7 இருக்கைகள் இருக்கிறதென்றால், அவற்றில், 5 இருக்கைகளில், other States மாணவர்கள் படிக்கிறார்கள். ஒவ்வொரு மாணவருக்கும் நமது மாநில அரசு ரூ.1.00 கோடி முதல் ரூ.5.00 கோடி வரை செலவு செய்கிறது. ஆக, இது மிகப் பெரிய அநியாயம்; அக்கிரமம். வடமாநிலத்திலிருக்கின்ற தேர்வு மையங்களில் காப்பியடிக்க அனுமதிப்பது, supervisor ஆக வருகின்றவர்களே online மூலம் அதற்கான பதில்களைச் சொல்வது, அந்த மாணவர்கள் தமிழ்நாட்டுக்குரிய இடங்களை எடுத்துக்கொள்வது போன்ற இந்த அக்கிரமமும், அநியாயமும் தொடர்ந்து மிக மோசமாக நடைபெறுகின்றன. NEET-ல்தான் இந்த நிலை என்றால் NET-லும் மிகப் பெரிய மோசடி நடந்திருக்கிறது. அதுவும் இன்றைக்கு வெளிவந்திருக்கிறது. உச்ச நீதிமன்றம் மிக வேகமாகக் குட்டியிருக்கிறது. ஆக, ஒன்றிய அரசால் நடத்தப்படுகின்ற அனைத்துத் தேர்வுகளிலும் மோசடி நடைபெறுகிறது. ஆதலால்தான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்த NEET-ஐ எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக, அதனை எதிர்த்து இன்றைக்கு அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில், U.P.S.C. தேர்விலும் இந்தத் தவறுகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு தமிழ்நாட்டை சேர்ந்த 42 மாணவர்கள் I.A.S., I.P.S. போன்றவற்றுக்கான உயர் தேர்வுகளை எழுதி உயர் பதவிகளுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, U.P.S.C. தேர்விலும் தமிழ்நாட்டை சேர்ந்தவர்களுக்கு உரிய இடங்கள் கிடைப்பதில்லை. அதிலும் மிகப் பெரிய முறைகேடுகளும், தவறுகளும் நடைபெறுகின்றன. இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எதிர்கால தமிழ்ச் சமூக மாணவர்களின் மருத்துவக் கனவை, பொறியியல் கனவை, I.A.S., I.P.S. கனவை மத்திய அரசின் மிக உயர்ந்த பதவிகளை எட்டுவதற்கான வாய்ப்புகளைத் திட்டமிட்டு ஒன்றிய அரசு பல சதி வேலைகளைச் செய்து, தடுத்து வருகிறது. அதற்கு முடிவு கட்டுகின்ற முயற்சியை அனைத்துத் துறைகளிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கி, நூற்றுக்கணக்கான மாணவர்கள் தற்கொலை செய்துகொள்வதற்குக் காரணமாக

2024 ஜூன் 28] [திரு. தி. வேல்முருகன்]

இருக்கின்ற NEET தேர்வை ஒன்றிய அரசு இந்தக் கூட்டத் தொடரில் இரத்து செய்யக்கூடிய அழுத்தத்தை 230-க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற இந்தியா கூட்டணி வலியுறுத்த வேண்டும். இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் டில்லிக்கு சென்று, எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து, கூட்டணிக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து, நாடாளுமன்றத்தை முடக்கி, நம் மாணவர்களின் எதிர்கால மருத்துவக் கனவை நாசமாக்குகிற, பொய்யாக்குகிற, அனிதா போன்று மாணவர்கள் மடிந்துவிடக் கூடாது என்பதற்காகக் கடுமையான முயற்சியை நீங்கள் மேற்கொண்டு, இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். NEET-ஓ, NET-ஓ, ஒன்றிய அரசு கொண்டுவரும் அனைத்துத் தேர்வுகளும் இரத்து செய்யப்பட வேண்டும். அரசுப் பள்ளிகளில், அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, ஏனைய U.G.C. தேர்வுகளில் pass செய்கின்ற மதிப்பெண்களின் அடிப்படையிலேயே மேல்படிப்பு பயில்வதற்கு உறுதியான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அரசினர் தனித் தீர்மானத்தை—தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக, இன்றைக்கு மன உளைச்சலுக்கு ஆளாகி, தேர்வு எழுத முடியாமல் திரும்பி வந்திருக்கிற ஒரு பிள்ளையின் தகப்பனாக என் வருத்தத்தைப் பதிவு செய்கிறேன்—இந்த அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET தேர்வினால் ஏற்படுகிற தீங்குகள் தமிழகத்தில் சொல்லப்பட்டு, இன்றைக்கு அனைத்து மாநிலங்களும் அந்தத் தீங்குகளைப் புரிந்துகொண்டு, NEET தேர்வு கூடாது என்பதை அழுத்தமாகப் பேசுகின்ற நிலை வந்திருக்கிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எப்படி அரவணைத்து கூட்டணி அமைத்தார்களோ, அதேபோன்று அனைத்து மாநிலங்களிலும் அதைச் செய்திருந்தால் முதல் கூட்டத் தொடரிலேயே இந்த NEET தூக்கியெறியப்பட்டிருக்கும். அதை நாம் தவற விட்டுவிட்டோம் என்றுதான் சொல்ல வேண்டும். இன்றைக்குப் பயிற்சிக் கட்டணம்

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2024 ஜூன் 28

என்பது, ஏழை எளிய மாணவர்கள் மட்டுமல்ல, நடுத்தர வர்க்கத்திலிருக்கின்ற மாணவர்களும் அதைக் கட்ட முடியாது; பயிற்சிக் கட்டணங்கள் அந்த அளவிற்கு உயர்ந்துள்ளன. இன்றைய சூழலில், NEET exam-ஐ ஏன் நம் மாநில மாணவர்கள் ராஜஸ்தான், பீகார் மற்றும் பிற மாநிலங்களுக்குச் சென்று எழுதுகிறார்கள் என்று புரிந்துகொள்ள வேண்டும். அம்மாநிலங்களில்தான் முறைகேடுகள் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட முறைகேடுகளின் மூலமாக பிற மாநிலங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் தமிழகத்தில் சேருகிறார்கள்.

முற்பகல் 10-40

தமிழக மாணவர்கள் மற்ற மாநிலங்களில் இருக்கிற மருத்துவக் கல்லூரிகளில் சேர்வது மிக மிகக் குறைவு. NEET தேர்வில் 650 மதிப்பெண் எடுத்தால் மட்டும்தான் ஏழை எளிய மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் சேர முடியும். அதற்குக் கீழே மதிப்பெண் எடுக்கின்ற மாணவர்கள், தனியார் கல்லூரிகளிலும், தனியார் பல்கலைக்கழகங்களிலும் சேரும்போது, வருடத்திற்கு 25 இலட்சம் ரூபாய் முதல் 35 இலட்சம் ரூபாய் வரை கட்டணம் கட்ட வேண்டும். Medicine முடிக்க வேண்டும் என்று சொன்னால் ஒன்றரைக் கோடி ரூபாய் வேண்டும். எத்தனை குடும்பங்கள் இந்தக் கட்டணத்தைக் கட்ட முடியும்? ஆக, இதில் மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது. அதனால் தமிழகத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல தீர்மானங்களை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, இவற்றை ஒழிக்க முடியாமல் இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் கடந்து செல்ல, கடந்து செல்ல, வேறு மாநிலத்தின் மாணவர்கள் தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் நிறைய சேருகிறார்கள். ஆரம்பத்தில் first list போடுவார்கள், second list போடுவார்கள், third list போடுவார்கள்; பிறகு யாருக்கெல்லாம் 25 இலட்சம் ரூபாய் முதல் 35 இலட்சம் ரூபாய் வரை கட்டணம் கட்டுவதற்கான திறமை இருக்கிறதோ அவர்கள் கல்லூரிகளில் சேருவார்கள். அப்போது வேறு மாநில மாணவர்கள், தமிழ்நாட்டு கல்லூரிகளில் சேருகிறார்கள். இதுதான் நடக்கிற எதார்த்தம். அதனால் நீட் தேர்வு என்பது கண்டிப்பாக நம்முடைய மாணவர்களின் எதிர்காலத்தை அழிக்கின்ற ஒரு தேர்வு. எந்த நிலைக்கு வேண்டுமானாலும் சென்று இதை ஒழிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.) ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை

2024 ஜூன் 28] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக முழு மனதோடு வரவேற்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பட்டப் படிப்பிற்கு நுழைவுத் தேர்வான நீட் தேர்வு தேவையில்லை. 12 ஆண்டுகள் பள்ளிப் படிப்பிலே எடுக்கக்கூடிய மதிப்பெண்களின் அடிப்படையிலே, மருத்துவப் பட்டப் படிப்பிற்கான மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். இந்தியாவிலேயே தமிழ்நாடு இன்று மருத்துவத்திற்குத் தலைநகரமாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய புகழ்பெற்ற மருத்துவர்கள் யாரும் நீட் தேர்வை எழுதி M.B.B.S., அதற்குப் பிறகு M.D., M.S. படிப்பையோ படித்தவர்கள் இல்லை. அதேபோல, இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்லூரிப் பேராசிரியர்களுக்காக NET, SLET போன்ற தேர்வுகள் இருக்கின்றன. கல்லூரிகளிலே பணிபுரிந்த இந்த அவையிலே இருக்கக்கூடிய நானாக இருக்கட்டும் அல்லது நமது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களாக இருக்கட்டும், நாங்கள் எந்த NET, SLET தேர்வும் எழுதாமல்தான் ஓரளவிற்கு எங்களுடைய மாணவர்களால் போற்றக்கூடிய பேராசிரியர்களாக மாறியிருக்கின்றோம். இந்தச் சூழலில் ஒட்டுமொத்தமான அனைத்து நுழைவுத் தேர்வுகளும் இரத்து செய்யப்பட வேண்டும் என்பதுதான் நியாயமானது. இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய வகையிலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பிற்கு வந்தபிறகு, சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமல்லாமல், நீதியரசர் திரு. A.K. ராஜன் தலைமையிலே ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழு அளித்திருக்கின்ற அறிக்கையை நான் முழுமையாகப் படித்திருக்கின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்பு மும்பையில் இதைப்பற்றி நடந்த கருத்தரங்கில், அதிலுள்ள விஷயங்களையெல்லாம் சொல்லும்போது, நம் தமிழ்நாட்டின் நியாயங்களைப் புரிந்துகொண்டார்கள். இந்தியா முழுவதும் பல மாநிலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பல மாநிலங்களில் உள்ள முக்கிய*

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2024 ஜூன் 28 அரசியல் தலைவர்கள், பல மாநிலங்களில் உள்ள மக்கள் எங்களுக்கு நீட் வேண்டாம், CUET வேண்டாம் என்றெல்லாம் மொழியக்கூடிய, முழங்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு முக்கியமான செய்தி. இந்த முக்கியமான செய்தியை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநிலங்களவை உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் திரு. P. வில்சன் அவர்கள், தனது 'X' தளத்தில் பதிவு செய்திருக்கிறார். இந்த நுழைவுத் தேர்வை நடத்துவதற்காக ஒன்றிய அரசு 2018-ல் அமைத்திருக்கின்ற National Testing Agency குறித்த தகவல்கள் அதிர்ச்சியாக இருக்கின்றன. அது ஒரு சங்கம் மட்டும்தான். அந்தச் சங்கம் யாருக்கும் பதில் சொல்ல வேண்டுமென்ற பொறுப்புடைமை கொண்ட சங்கம் அல்ல. அந்தச் சங்கத்தில் 10 பேர் மட்டும்தான் இருக்கிறார்கள். ஒரு சங்கம் என்றிருந்தால் பொதுக் குழு இருக்க வேண்டும். அதெல்லாம் கிடையாது. இந்தச் சங்கத்திற்கு 2023-ல் மத்திய அரசு ரூ.35 கோடியை ஒதுக்கியிருக்கிறது. ஏறத்தாழ 1 கோடியே 30 இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் இந்த 10 பேர் கையில் இருக்கிறது. இது National Testing Agency அல்ல. This is National Troubling Agency.

முற்பகல் 10–4.5

இந்த நுழைவுத் தேர்வுகளை நடத்துவதற்கு NTA-க்கு எந்தத் தகுதியும், திறனும் கிடையாது; அருகதையும் கிடையாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வரவேற்பதோடு, நம்முடைய அன்புச் சகோதரர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் சொன்ன மாதிரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று இந்தியாவிலேயே மதிப்புமிக்க INDIA கூட்டணியினுடைய தலைவர்; நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர். அவருடைய குரல் வலிமையானது. ஒட்டுமொத்தமாக இந்த NTA-வை ஒழிக்கும் வரை, NEET போன்ற நுழைவுத் தேர்வுகளை ஒழிக்கும் வரை நம்முடைய போராட்டம் தொடர வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனித் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

2024 ஜூன் 28]

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் வாழ்கின்ற ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழை மக்கள் கல்வி கற்பதற்கு, குறிப்பாக* M.B.B.S. *போன்ற உயர் கல்வி கற்பதற்கு ஏதுவாக* NEET *என்ற இந்த நுழைவுத் தேர்வு இல்லாமல், +2 மதிப்பெண்களை வைத்தே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற ஒரு தனித் தீர்மானத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ளதை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முதலில் நான் ஆதரிக்கிறேன்; அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நாங்களெல்லாம்* M.B.B.S. *படிக்கும்போது 1970-களில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான்* HoD *ஆக இருப்பார்கள். உதாரணத்திற்கு 25 துறைகள் இருந்தால், அதில் 23 துறைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான்* HoD *ஆக இருப்பார்கள். அதற்குக் காரணம், கடைகோடியில் வாழ்கின்ற மக்களுக்கு இதுபோன்ற கல்வி ஒருகாலத்தில் மறுக்கப்பட்டதுதான். அதுபோன்று, இப்போது அது மறுக்கப்படுவதற்குக் காரணம்—அந்த* entrance test*-க்காக* coaching *எடுப்பதற்கு அதிக பணம் செலவாகிறது. ஏழை மக்கள் அந்தளவுக்குப் பணத்தைச் செலவழித்து படிக்க முடியாத நிலை இருக்கிறது. இப்போது வெளியாகியிருக்கின்ற* NEET *தேர்வின் முடிவுகள் மிகவும் கவலைப்பட வைப்பதாக இருக்கின்றன. கிட்டத்தட்ட 23,33,000 மாணவர்கள் தேர்வு எழுதியதில் 13,16,000 மாணவர்கள் அதற்குத் தகுதி பெற்றிருந்தார்கள். 18 மாநிலங்களைச் சேர்ந்த 67 மாணவர்கள், நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள், அதாவது, 720-க்கு 720 மதிப்பெண்கள் எடுத்திருக்கிறார்கள். முன்னர் நடந்த* NEET *தேர்வுகளில் இரண்டு அல்லது மூன்று பேர்* cent percent *மதிப்பெண்கள் எடுத்திருப்பார்கள். அதேபோன்று ஹரியானா மாநிலத்தில் ஒரே* Centre*-ஐச் சேர்ந்த 6 மாணவர்கள்* Entrance test*-ல் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் எடுத்திருக்கிறார்கள். இதன்மூலம் அங்கு ஏதோ குறுக்கு வழியில் தேர்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன என்று தெரியவருகிறது. மாண்பமை உச்ச நீதிமன்றம்கூட அதற்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறது. ஆகவே, இதுபோன்ற தேர்வு தேவையில்லை.* NEET *போன்ற தேர்வு எதிர்காலத்தில் தேவையில்லை. நம்முடைய மாணவர்கள் குறிப்பாக, கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழை மாணவர்களும்* M.B.B.S. *போன்ற உயர் கல்வி கற்பதற்கு வர வேண்டும்*

[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்] [2024 ஜூன் 28 என்பதற்காக இந்த முறையை ஒழிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளுக்கு நான் மீண்டும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியின் ஆணிவேராகத் தமிழ்நாடு திகழ்கிறது. சமூக நீதியின் ஆணிவேரில் வெந்நீரை ஊற்றுவதைப்போல, ஒன்றிய அரசு இளங்கலை மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வாக NEET-ஐ நுழைத்து, தமிழ்நாட்டிலுள்ள ஏழையெளிய, கிராமப்புற மாணவர்களுடைய கல்விக் கனவைக் கலைத்திருக்கிறது. ஆகவேதான், கிராமப்புற ஏழையெளிய மாணவர்களும், மருத்துவப் படிப்பு படிக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் NEET தேர்விலிருந்து விலக்கு வேண்டுமென்று இரண்டு முறை சட்டமன்றத்தில் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடத்தில் இன்றைக்கு அவை நிலுவையில் இருக்கின்றன. அண்டை மாநிலமான கேரள சட்டமன்றத்தில்கூட NEET தேர்விலிருந்து விலக்கு வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் NEET தேர்விலிருந்து விலக்கு வேண்டுமென்ற குரல் இன்றைக்கு ஒலித்துக்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10–50

சமீபத்தில் இளங்கலை மருத்துவப் படிப்பிற்கான நீட் தேர்வு முடிவுகள் மாணவர்கள் மத்தியில் பெரிய அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக, 67 மாணவர்கள் 720-க்கு 720 மதிப்பெண்கள் எடுத்தது, ஆள் மாறாட்டம், NET தேர்வு வினாத்தாள் கசிவு, முதுகலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு இரத்து போன்றவற்றால், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய தேர்வு முகமைமீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கிறது.

மாணவ அமைப்புகள் எல்லாம் தற்போது டெல்லியில் உள்ள தேசிய தேர்வு முகமையின் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு, பூட்டுப் போடுகின்ற போராட்டத்தை நடத்திக்

2024 ஜூன் 28] *[திரு. ட்டி. இராமச்சந்திரன்]*

கொண்டிருக்கின்றன. தேர்வு நடத்துகின்ற அதிகாரம், ஒன்றிய அரசின் தேசிய தேர்வு முகமையிடம் இல்லாமல், அந்த நுழைவுத் தேர்வுகள் நடத்தும் அதிகாரத்தை கல்வி மாஃபியாக்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், இளங்கலை மருத்துவப் படிப்பு மட்டுமல்லாமல், முதுகலை மருத்துவப் படிப்பு, உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளுக்கும்கூட நீட் தேர்விலிருந்து விலக்கு வேண்டுமென்ற தீர்மானத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். எனவே, +2 மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

***திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசை வலியுறுத்தி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முதலில் நான் வரவேற்கிறேன்.*

நீட் தேர்வு ஏன் தமிழகத்திற்கு கூடாது என்பது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தீர்மானத்தில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்குள் போகவில்லை. ஒரேயொரு வரலாற்றுச் சம்பவத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மிருக வதை தடைச் சட்டம், மத்திய அரசினுடைய பட்டியலில் இருக்கிறது. தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நடத்தக் கூடாது என்று மத்திய அரசு சொன்னபோது, தமிழகமே திரண்டு, ஒரே உணர்வோடு போராடியதன் விளைவாக, ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. மிருக வதை தடைச் சட்டம் மத்திய அரசின் பட்டியலில் இருந்தாலும், அதற்கு ஒரு தளர்வு கொடுத்து, அதற்குப் பிறகுதான், ஜல்லிக்கட்டு போட்டியை நடத்தலாம் என்று மத்திய அரசு சொன்னது. ஆகவே, இந்தத் தீர்மானத்தில்கூட, இந்த முன்னுதாரணத்தைச் சொல்லி,

[திரு. வி.பி. நாகைமாலி] [*2024 ஜூன் 28 ஜல்லிக்கட்டுக்கு மத்திய அரசு தளர்வு வழங்கியதைப்போல, நீட் தேர்விலிருந்தும் தமிழகத்திற்கு விலக்கு அளிக்கலாம் என்கிற அந்தக் கருத்தையும் இந்தத் தீர்மானத்திலே இணைத்துக்கொள்ளலாம் என்கிற ஆலோசனையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்தத் தனித் தீர்மானத்தை மீண்டும் மனதார ஆதரிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவே ஏற்றுக்கொண்டுவிட்டது, தமிழ்நாடு ஏன் எதிர்க்கிறது? எல்லா மாநிலங்களும் நீட் தேர்வை வரவேற்கின்றன, தமிழ்நாடு மட்டும் ஏன் எதிர்க்கிறது? என்று இவ்வளவு நாளும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். தமிழ்நாடு மட்டும்தான் 50 விழுக்காட்டிற்குமேல்போன இட ஒதுக்கீட்டை 69 விழுக்காடாகச் செய்து காட்டியது; இந்தி திணிப்பை எதிர்த்தது; முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது; இந்தியாவில் யாரும் நினைத்துப் பார்க்காத காலத்தில், தமிழ்நாடு மட்டும்தான் இவற்றையெல்லாம் செய்து காட்டியது. அந்த வரிசையில் நீட் தேர்வு அறிமுகம் செய்யப்பட்டபோது, யாருக்கும் அதனுடைய வீரியம் புரியவில்லை; அது எவ்வளவு பெரிய கொடூர தேர்வு முறை என்பது யாருக்கும் விளங்கவில்லை; தமிழ்நாட்டிற்கு மட்டும்தான் அதனுடைய ஆபத்து புரிந்தது; தமிழ்நாடு சட்டமன்றம் மட்டும்தான் நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றியது; மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மட்டும்தான் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி கடிதம் எழுதியபோதுகூட பெரிய வரவேற்பு இல்லை. அதை வைத்து நம்மை கேலி செய்தார்கள். ஆனால், இன்றைக்குக் காலம் உணர்த்தியிருக்கிறது; தமிழ்நாடு சொன்னதுதான் உண்மை; தமிழ்நாடு எதிர்த்ததுதான் சரி; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய நீட் தேர்வு விலக்கு மசோதா நியாயமானது என்று தற்போது ஒவ்வொரு மாநில சட்டமன்றமாகத் தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றன. எனவே, தமிழ்நாட்டினுடைய நியாயம், அகில இந்திய அளவில் இன்றைக்கு ஒரு மிகப் பெரிய புரிதலை ஏற்படுத்தியிருக்கக்கூடிய ஒரு சூழல் உருவாகியிருக்கிறது.*

2024 ஜூன் 28] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திசைவு பட்டியலில்தான் கல்வி இருக்கிறது. மாநில பட்டியலில் இருந்த கல்வியை, நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி, ஒன்றிய அரசு ஒத்திசைவு பட்டியலுக்கு கொண்டு சென்றது. ஒத்து இசைய வேண்டும்; ஒன்றிய அரசும், மாநில அரசும் ஒத்திசைந்தால் மட்டும்தான் கல்வி தொடர்பான ஒரு முடிவையே எடுக்க முடியும். இது கல்வி தொடர்பான ஒரு முடிவு. நம்முடைய இசைவைக் கேட்காமலேயே, ஒத்திசையாமலேயே, ஒத்திசைவு ஏற்படாமலேயே, ஒன்றிய அரசு தன்னிச்சையாக ஒரு முடிவை எடுத்திருக்கிறது. இதுவே முதலில் சட்டவிரோதம். இது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் சம அதிகாரம் இருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் தெளிவுபடுத்தியிருக்கிறது. நாடாளுமன்றத்தில் ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறது என்றால், சட்டமன்றத்திற்கு அந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால், நாம் மறுப்பதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. நாடாளுமன்றத்தில் நீட் வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். சட்டமன்றத்தில் நீட் வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். நாடாளுமன்றம் சொன்னது சரி என்றால், அதற்கு அதிகாரம் இருக்கிறது என்றால், சட்டமன்றத்தில் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோமே, இதற்கும் அதிகாரம் இருக்கிறது. இதையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டதை மட்டும் ஏற்றுக்கொள்வோம். சட்டமன்றத்தில் இயற்றப்பட்டதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்வதும் சட்டவிரோதம்.

எனவே, நாம் சட்டவிரோதமாக எதையும் சொல்லவில்லை; கேட்கவில்லை. சட்டத்திற்குட்பட்டு, நம் அதிகாரத்திற்குட்பட்டு கேட்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் இவ்வளவு நாளும் சொல்லி வந்தது உச்ச நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலில் சொல்லப்பட்டிருக்கிறது; உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் செய்திருக்கிறோம். எனவே, இதில் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. அதைத்தான் நம்முடைய அண்ணன் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள் இங்கே குறிப்பிட்டார். ஜல்லிக்கட்டு விஷயத்தில்கூட உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு எப்படி இருந்தது? அதை மீறி

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2024 ஜூன் 28 நாம் எப்படி செய்தோம் என்று. எல்லாவற்றிற்கும் மேலாக ஏதோ ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு மிகப் பெரிய மதிப்பு கொடுத்து உச்ச நீதிமன்றம் சொன்னதையெல்லாம் அப்படியே அடிபிறழாமல் பின்பற்றுவதுபோல, ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. டெல்லி மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு என்று உச்ச நீதிமன்றம் சொன்னது. அதை மீறி அவர்கள் சட்டம் இயற்றினார்கள், அதிகாரத்தைப் பறிப்பதற்கு. தேர்தல் பத்திரங்கள் தொடர்பான விவரங்களை உடனே கொடுங்கள் என்று உச்ச நீதிமன்றம் கேட்டது; அந்த உச்ச நீதிமன்றத்தோடு எப்படி மல்லுகட்டினார்கள் என்பதைப் பார்த்தோம். உச்ச நீதிமன்றத்தோடு எத்தனை முறை ஒன்றிய அரசு முரண்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் சொன்னதற்கு மாறாக நடந்து வந்திருக்கிறது என்பதற்கு மிகப் பெரிய பட்டியல் இருக்கிறது. அமலாக்கத் துறை இயக்குநர் பதவி நீட்டிப்பு என்பது சட்டவிரோதம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மீண்டும், மீண்டும் ஒரே நபருக்கு பதவி நீட்டிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏதோ உச்ச நீதிமன்றம் சொன்னால் இவர்கள் கட்டுப்படுகிற மாதிரி நீட் விஷயத்தில் மட்டும் ஒரு பாவனை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த உச்ச நீதிமன்றத்திலே நீட் தொடர்பாக இந்தியா முழுவதிலிருந்தும் புகார்கள் வருகின்றன. நீட் தொடர்பாக பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்; வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். எண்ணற்ற வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக இது ஒரு தகுதி அறியும் தேர்வு என்று சொல்லி, இதற்கு ஒரு முலாம் பூசிக் கொண்டிருந்தார்கள். இது தகுதியற்ற தேர்வு என்பதை அன்றாடம் வரக்கூடிய செய்திகள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

எனவே, மாறி வரக்கூடிய இந்தச் சூழல்களை நாம் உள்வாங்கி நீட் எதிர்ப்பை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும். தமிழ்நாடுதான் இந்தியாவிற்கு எல்லாவற்றிலும் வழிகாட்டிய மாநிலம். அதுவும் கல்வி தொடர்பான விஷயத்தில் இந்தியாவில் மற்ற எந்த மாநிலத்திற்கும் இல்லாத ஒரு வரலாறு நமக்கு உண்டு. அது என்னவென்றால், தமிழ்நாட்டின் கல்வி வரலாறுதான் தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு; தமிழ்நாட்டின் அரசியல் வரலாறுதான் தமிழ்நாட்டின் கல்வி வரலாறு. இராஜாஜி பதவியிழந்ததும் கல்வியால்தான்; காமராஜர் முதலமைச்சராக மிகப் பெரிய அளவிற்கு அதிகாரம் செலுத்தியதும் கல்வியால்தான். திராவிட இயக்கம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக அசைக்க

2024 ஜூன் 28] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

முடியாத சக்தியாக இந்த மண்ணில் வேரூன்றி இருப்பதற்கும் கல்விதான் அடிப்படை. எனவே, கல்வி தொடர்பான விஷயத்தில் நாம் மிகவும் sensitive ஆனவர்கள். மிகவும் உணர்வுபூர்வமானவர்கள். அதிலே எந்த compromise-ம் நாம் செய்ய மாட்டோம். அதை ஒன்றிய அரசுக்கு எல்லா காலத்திலும் நாம் புரிய வைத்திருக்கிறோம். நம்முடைய அந்தக் குரலை ஒவ்வொரு மாநிலமாகப் பின்பற்றத் தொடங்கியிருக்கிற இந்தச் சூழலில், மீண்டும் இந்தச் சட்டமன்றத்தில் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீட் தொடர்பாகக் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வரவேற்று, இந்த அரசுக்கு இதுபோன்ற விஷயங்களில் எப்போதும் நாங்கள் துணையாக நிற்போம் என்று சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தில் ஆதரித்தும் பேசலாம்; எதிர்த்தும் பேசலாம். ஆனால், ஆதரித்துப் பேசக்கூடியவர்கள், தங்களுடைய வார்த்தைகளை அளந்து பேச வேண்டும். எனக்கு முன்னாலே உறுப்பினர் ஒருவர் பேசினார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டேயிருப்பீர்கள்; கவனிக்காதது மாதிரியும் இருப்பீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படியெல்லாம் இல்லை.* Speaker *மீது தவறான குற்றச்சாட்டைச் சொல்லாதீர்கள். அவர்கள் எந்தவொரு* unparliamentary word*-ஐயும் பயன்படுத்தவில்லை. நடந்த சம்பவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் பதிவு செய்ய அனுமதித்தேன்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *நடந்த சம்பவம் என்பது வேறு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உண்மைக்குப் புறம்பான. . . (குறுக்கீடு)*

[*2024 ஜூன் 28*

திரு. நயினார் நாகேந்திரன்: NTA-க்கு தேர்வுகளை நடத்துவதற்கு அருகதையும் இல்லை, தகுதியும் இல்லை என்கிற வார்த்தைகள் இடம் பெறலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு)

திரு. நயினார் நாகேந்திரன்: அந்த உறுப்பினர் பேசும்போது நான் குறுக்கிட்டுப் பேசவேயில்லை. (குறுக்கீடு) ஆனால், ஒருவருக்கொருவர் மரியாதை கொடுத்துப் பேசுகிறோம். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்கிறபோதும் எல்லோரும் அன்போடு பழகுகிறோம். (குறுக்கீடு) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

திரு. நயினார் நாகேந்திரன்: இல்லை, இல்லை. (குறுக்கீடு) அருகதை போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவது சரியானது என்று நீங்கள் சொன்னால், (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. National Testing Agency—அந்த agency-யைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொன்னார். உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், மாணவர் அமைப்பு எல்லோருமே அதைக் குற்றச்சாட்டாகச் சொல்கிறார்கள். அதனால்தான் அதை ஒன்றிய அரசு, . . .

திரு. நயினார் நாகேந்திரன்: இல்லை, இல்லை. ஒன்றிய அரசோ, கூட்டணி அரசோ சொல்லவில்லை. ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்ன அந்த வார்த்தையை நான் அப்படியே சொல்கிறேன். National Testing Agency தகுதி இழந்து விட்டதென்றுதான் அவர் சொன்னார். ஏற்கெனவே ஒன்றிய அரசு அதை நினைத்துத்தான் test எழுதியதற்கு அதை இரத்து செய்து விட்டார்கள். அதற்கு அவர்களுக்கு உரிமையில்லை என்று சொல்லிவிட்டார்களே! நீங்கள் அதனால் (குறுக்கீடு) இருங்கள். இருங்கள். இல்லை. நீங்கள் வாருங்கள். அந்த Chairman-ஐயும் மாற்றிவிட்டார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2024 ஜூன் 28]

திரு. நயினார் நாகேந்திரன்: *அந்த* NTA *பற்றி பேசுவதற்கு இவருக்கு* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. உங்கள் தகுதிக்கு அதை பேச வேண்டாம். நீங்கள் சொன்ன அந்த வார்த்தையை நீக்கி விடுகிறேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சப்ஜெக்ட்டில் பேசுங்கள். உங்கள் கருத்துகள் எல்லாவற்றையும் சொல்லுங்கள். தமிழ்நாட்டு மக்கள்தான் நமக்கு ஓட்டு போட்டிருக்கிறார்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* NEET *தகுதித் தேர்வு என்பது அவசியமானது; நியாயமானது. தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே பெருமை சேர்க்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் குறிப்பிட்டதுபோல, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசாங்கம், அன்றைக்கு இருந்த அவர்கள் கூட்டணி அரசாங்கம்தான் கொண்டு வந்தது. (குறுக்கீடுகள்) நான் பேசிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். உறுப்பினர் அவர்கள் பேசட்டும்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *ஆக, அன்றைக்குக் கொண்டுவந்தார்கள், அதனுடைய அடிப்படையில் இன்றைக்குள்ள பிரச்சினை என்பது இதே மன்றத்தில் இரண்டு முறை நாம் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். கடந்த அரசும், நமது முதலமைச்சர் அவர்களும் இதைக் கொண்டுவந்து, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. கொண்டு வந்திருந்தாலும் விருப்பப்பட்டவர்கள் என்று சொன்னார்கள். நீங்கள் 2018-ல் சட்டமாக்கி, அதையும் சேர்த்து சொல்லிவிடுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *எல்லோரும் பேசும்போது அமைதியாக இருந்தீர்கள். நான் பேசும்போது மட்டும் குறுக்கே, குறுக்கே பேசுகிறீர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2024 ஜூன் 28*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நான் தவறாகச் சொல்லவில்லை. உங்களுக்குத் தெரிந்ததையும் சேர்த்துச் சொல்லுங்கள். அவ்வளவுதான்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *இந்தத் தேர்வைப் பொறுத்தமட்டிலும், இதில் குளறுபடி நடந்ததாகவும், மத்திய அமைச்சரே அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் சொல்லியிருக்கிறார். அதுமட்டுமல்ல, பல்வேறு காலகட்டங்களில் நாம் எல்லோரும் இருந்திருக்கிறோம். நாம் பள்ளியில் படித்த காலத்திலிருந்து இந்தக் காலம் வரையிலும் ஒருசில சமயங்களில் ஒருசில இடங்களில் கேள்வித்தாள்கள்* out *ஆகிவிட்டன என்கிற மாதிரி பிரச்சினைகள் வந்திருக்கின்றன. அதேபோன்று குளறுபடிகளை நிச்சயமாகக் களைவோம்; நடவடிக்கை எடுப்போமென்று மத்திய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முக்கியமான பிரச்சினை என்னவென்றால் கிராமப்புற ஏழை மாணவர்கள் யாரும்* NEET *தேர்வில் வர முடியாதென்ற சூழல் இருந்தது. அன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களோடு அன்றைக்கு முதலமைச்சராக இருந்த திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கலந்துபேசி, கிராமப்புறங்களில் படிக்கிற மாணவர்களுக்கு 7.5 சதவிகிதம் உள் இட ஒதுக்கீடு கொடுத்தது அன்றைய நமது மத்திய அரசு. திரு. ஜே.பி. நட்டா அவர்கள் தற்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். இதனால் கிராமப்புறங்களில் நிறைய பேர் படிக்கிறார்கள். எங்கள் பகுதியிலுள்ள மேலப்பாளையம் என்ற ஊரில் மட்டும் 10 பேர்* NEET *தேர்வில் தேர்ச்சி பெற்று இன்றைக்கு படித்துக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) மானூர் ஒன்றியத்தில் குத்தாலபேரி என்ற ஒரு கிராமத்தில் தோட்ட வேலையில் ஈடுபடக்கூடிய சாதாரண ஒரு பெண்; ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்; அவரின் பிள்ளை பணம் செலவழிக்காமல் இன்றைக்கு படிப்பதற்கு வந்திருக்கிறார். இதனால் நிறைய நன்மைகள் இருக்கின்றன. அதையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஒருசில விஷயங்களை வைத்துக்கொண்டு நாம் தொடர்ந்து இதையே செய்து கொண்டிருக்க வேண்டாம் என்பதுதான் எங்களுடைய கருத்து.* NEET *தேர்வு என்பது நிச்சயமாக வேண்டும். அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை எங்களால் ஏற்க இயலாது. நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

2024 ஜூன் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

முற்பகல் 11-05

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுக்கு தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொதுவாக, இதற்கு முன்பு தமிழ்நாட்டில் நுழைவுத் தேர்வு இருந்தது. அந்த நுழைவுத் தேர்வை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தி நடத்திய நேரத்தில் முதலில் எதிர்த்தது மட்டுமல்ல; அன்றைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்தில் இதே அவையில் நான்தான் முதன்முதலில் கோரிக்கை வைத்தேன். 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மருத்துவக் கல்வி, உயர் கல்வி என்பது ஏழை மாணவர்களுக்கு எட்டாக்கனியாக இருக்கிறது. இந்த நுழைவுத் தேர்வு, நுழையாத் தேர்வாக அமைந்திருக்கிறது. ஆகவே, இது கூடாது' என்று கோரிக்கை வைத்துப் பேசினேன். அதற்குப் பிறகு, எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து அதை ஆதரித்தார்கள். ஆதரித்ததன் அடிப்படையில், இந்தியாவிற்கே வழிகாட்டியாக, நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டது தமிழ்நாட்டில்தான்; அது கலைஞர் அவர்களால்தான். அந்த நுழைவுத் தேர்வின் மறுவடிவம்தான் இந்த NEET தேர்வு. இதனைத் தகுதி என்று சொல்கிறார்கள். தமிழக அரசு கொண்டுவந்த நேரத்திலும் சரி; நடுவண் அரசு கொண்டுவந்த நேரத்திலும் சரி; இந்த நுழைவுத் தேர்வு கூடாது என்று, அதை எதிர்த்து கடுமையாகப் போராடி வருவது பாட்டாளி மக்கள் கட்சி. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 12 ஆம் வகுப்புத் தேர்வை அரசு நடத்துகிறது. இவ்வாறு 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு தேர்வுகளை அரசே நடத்திவிட்டு, மீண்டும் இன்னொரு தேர்வு எதற்கு என்பதுதான் மிகப்பெரிய கேள்வி. அப்படி கேள்வியாக இருந்தாலும்கூட, மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபாடாக இருந்தாலும்கூட, அது தமிழ்நாட்டுக்கு தேவையில்லை என்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் கருத்து; பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்து; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனித் தீர்மானத்தை இரண்டு முறை இந்த மாமன்றத்திலே நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். அந்த அடிப்படையில், இந்தத் தகுதித் தேர்வு என்பது தேவையில்லை.

[திரு. ஜி.கே. மணி] [2024 ஜூன் 28

தகுதியின் அடிப்படையிலேதான் 12 ஆம் வகுப்பில் மதிப்பெண் பெறுகிறார்கள். அந்த 12 ஆம் வகுப்பு மதிப்பெண் என்பதே போதுமானது; இன்னொன்று தேவையில்லை.

அதுமட்டுமல்ல, இந்திய அளவில் எடுத்துக்கொண்டால், மருத்துவக் கல்லூரிகள் அதிகம் இருப்பது தமிழ்நாட்டில். அதுபற்றிகூட நாங்கள் கோரிக்கை வைத்தோம். அரசின் முடிவாக, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டு வருகின்றன. அப்படி அதிக எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவப் படிப்பு மாணவர்களின் சேர்க்கை அதிக எண்ணிக்கையில் இருக்கிற இந்த நேரத்தில், NEET தேர்வினால், மற்ற மாநிலங்களிலிருந்து எல்லோரும் இங்கே வந்து நுழைந்துவிடுகிறார்கள். தமிழ்நாட்டின் உரிமை பறிக்கப்படுகிற செயலாகவே இதை நாம் பார்க்கிறோம். இந்தத் தனித் தீர்மானம் என்பது தமிழ்நாட்டின் உரிமையைக் காக்கிற தீர்மானமாகப் பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.

அந்த அடிப்படையிலேதான், இந்த NEET தேர்வை எழுதுவதற்கு, இன்று ஏழை குடும்பத்து மாணவர்கள், நிலத்தை விற்று அல்லது நிலத்தின்மீது கடன் வாங்கி, 12 ஆம் வகுப்பு படித்துக் கொண்டே NEET தேர்வுக்கு தயாராகிறார்கள். நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு மாணவனுக்கு குறைந்தது ரூபாய் 3.5 இலட்சம், ரூபாய் 5 இலட்சம், ரூபாய் 6 இலட்சம், ரூபாய் 7 இலட்சம் என்று எவ்வளவு செலவழிப்பது? இது ரொம்ப கூடுதலாக இருக்கிறது; இது கூடாது. இவ்வாறு NEET தேர்வில் எப்படியாவது தேர்ச்சிபெற வேண்டுமென்று முயற்சித்த மாணவ, மாணவிகள் இயலாமையினால் தற்கொலை செய்யக்கூடிய சங்கடத்தையும் பார்த்தோம். எத்தனை தற்கொலை சாவுகள் நமக்கு பாடம் கற்பித்திருக்கின்றன? எனவே, இந்த நுழைவுத் தேர்வு என்பது நுழையாமல் இருப்பதற்கான ஒரு தேர்வாக இருக்கிறது என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டின் உரிமையைக் காக்கிற தீர்மானம். NEET தேர்வு கூடாது என்பதிலே பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக இருக்கிறது. இந்தத் தனித் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

2024 ஜூன் 28]

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு என்றாலே இந்தியாவிற்கு எப்போதும் வழிகாட்டுகின்ற மாநிலம். மாண்புமிகு முதலமைச்சர் தமிழ்நாட்டிற்கு மட்டும் NEET வேண்டாம் என்று தீர்மானத்தை உள் அளவில் நிறைவேற்றினாலும், இந்திய அளவில் இன்று பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. எதற்காக NEET வேண்டாம் என்பதை இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 13-9-2021 அன்று முதன்முதலாக தீர்மானம் இயற்றும்பொழுது தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். NEET தேர்வினால் எவ்வளவு பெரிய ஆபத்துகள் இருக்கின்றன; கிராமப்புற மாணவ, மாணவிகள் NEET-ல் வெற்றிபெற முடியுமா; அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் NEET-ல் தேர்ச்சியடைய முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் தெளிவாக இங்கே பேசினார்கள். ஆனால், 2 ஆண்டுகள் கழித்து, அவர் என்ன சந்தேகப்பட்டாரோ, எந்த ஐயத்தைத் தெரிவித்தாரோ, எந்த மாணவ, மாணவிகளைப் பாதுகாக்க வேண்டுமென்று அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாரோ அது நடந்திருக்கிறது. இப்பொழுது எல்லா மாநிலங்களிலும் NEET முறைகேடுகள் சந்தி சிரித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக 4-6-2024-ல் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வந்தன. NTA—NDA இல்லை-National Testing Agency. பா.ஜ.க. நண்பர்களுக்கு—அளந்து பேசுகிறோம். அந்த National Testing Agency-ஐ நியமித்தது யார்? அதற்கு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது யார்? Byju's நிறுவனத்தோடு ஒப்பந்தம் போட்டது யார்? வருடத்திற்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் வருகிறதே! அதில் பங்குதாரர்கள் யார்? அனைத்தையும் சொன்னால் இந்த அவையிலே வருத்தப்படுவார்கள். மிகவும் பணிவோடு சொல்கிறோம். இந்த NEET என்பது எவ்வளவு பெரிய ஊழல் நிறைந்த தேர்வு என்பதை நாம் 10 நாட்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11-10

NTA-National Testing Agency என்பது 11 ஆம் தேதி தேர்வு முடிவுகள் வெளிவரும் என்று அறிவித்திருந்தது. ஆனால், யாருக்கும் தெரியாமல் இந்தத் தேசத்தினுடைய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வரும் நாளான ஜூன் 4 ஆம் தேதியே, 11 மணிக்குத் தேர்வு முடிவுகளை அறிவிக்கிறது. இதில் என்ன

[திரு. கு. செல்வபெருந்தகை] [2024 ஜூன் 28 இரகசியம் என்பது யாருக்கும் தெரியாது. மகாராஷ்டிரா, மும்பையைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் தேர்வு முடிவுகளைப் பார்க்கும்போது 719 மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு வினாவிற்கு 4 மதிப்பெண். இரட்டைப் படையில்தான் அந்த மதிப்பெண் வழங்கப்படுகிறது. 720 மதிப்பெண் வாங்கினால்கூட சந்தேகப்பட்டிருக்க மாட்டார்கள். எந்த அடிப்படையில், எப்படி 719 மதிப்பெண் பெற்றனர்? குறிப்பாக, குஜராத் மாநிலம், கோத்ரா மாவட்டத்தில் 60 பேர் இந்த மதிப்பெண்ணைப் பெற்றிருக்கிறார்கள். அந்த ஐயம் வந்தபிறகுதான் அங்கே மாணவர்களின் புரட்சி வெடிக்கிறது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் மும்பையில் போராட்டத்தில் குதிக்கிறார்கள். ஒரு கேள்வியின் விடைக்கு 4 மதிப்பெண் என்றால், 720 மதிப்பெண் சரி, 716 சரி, ஆனால், அது எப்படி 719 வந்தது என்று அவர்கள் கேட்டபோதுதான், ஆங்கில பத்திரிகைகளெல்லாம் NTA-National Testing Agency-ஐ விமர்சனம் செய்தன. அப்போது, சமாளிப்பதற்காக என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள் தாமதமாக வினாத்தாளைக் கொடுத்தோம்; ஆகையால், ஒரு மதிப்பெண் அவர்களுக்கு extra கொடுத்தோம் என்று. அதற்குப் பெயர் grace mark என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், அந்த National Testing Agency-லும், Higher Education துறையிலும் grace mark கொடுக்கப்படும் என்று எங்கேயாவது சட்டரீதியாக இருக்கிறதா? இதை நாங்கள் கேட்கவில்லை; உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் கேட்டார்கள். எந்தச் சட்டத்தில், யார் உங்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது என்று கேட்டார்கள். ஒரு மதிப்பெண், grace mark என்று சொல்கிறீர்களே, அதைக் கூடுதலாக வழங்குவதற்கு, அந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்? எந்தச் சட்டத்தில் இருக்கிறது என்பதை நீதிமன்றத்திற்கு எடுத்து வாருங்கள் என்று சொன்னார்கள். இது சிறிய தவறு என்று பதில் சொன்னார்கள். உச்ச நீதிமன்றம் குட்டு வைத்தது. ஒரு சதவிகிதம் தவறு நடந்தாலும்கூட தவறுதான். நீங்கள் மறுதேர்வு நடத்துங்கள் என்று சொன்னார்கள்.

NTA முகமையினுடைய அதிகாரி-Chairman யார்? உடனே, அவரை அழைத்து வாருங்கள் என்று சொன்னார்கள். ஒன்றிய அரசு அவரை அழைத்து வராமல், அவரை உடனே இராஜினாமா செய்யச் சொல்லி, அந்தப் பதவியிலிருந்து எடுத்துவிட்டது. திருடன் புதருக்குள் இருக்கிறான் என்பதற்கு இவையெல்லாம் சாட்சிகள். இதை அறிந்துதான் எங்களுடைய

2024 ஜூன் 28] [திரு. கு. செல்வபெருந்தகை]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தமிழ்நாட்டு மாணவ, மாணவிகள் பாதிக்கப்படுவார்கள் என்பது மட்டுமல்ல, தேசத்திலுள்ள மாணவ, மாணவிகளெல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்பதால் தீர்க்கதரிசியாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மறுதேர்வு ஏறக்குறைய 1,563 பேருக்கு நடத்தினார்கள்; 750 பேர் தேர்வு எழுதவில்லை. என்ன காரணம் என்றால் இந்த NEET தேர்வின்மீது நம்பிக்கையில்லாமல், தேர்வுக்கு வராமல் போய்விட்டார்கள்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் காங்கிரஸ் பேரியக்கம்தான் அதைக் கொண்டு வந்தது என்று சொன்னார். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். Medical Council of India Vs. Modern Dental College வழக்கில், மாநிலங்களவையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு, eligibility test, not NEET, இதைக் கொண்டுவரலாம் என்று பரிந்துரை செய்தது. அப்போது, உச்ச நீதிமன்றத்தில் சமூக ஆர்வலர்கள் தடையாணை பெற்றார்கள். இது காங்கிரஸ் பேரியக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியாக இருந்த நேரத்தில் நடைபெற்றது. 2014 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலிருந்து நாங்கள் இறங்கி ஆட்சியைக் கொடுத்தோம். 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் குஜராத்தை சார்ந்த சங்கல்ப் இயக்கம், RSS பின்னணியில் உள்ள சங்கல்ப் இயக்கம், மனுதாரராக உச்ச நீதிமன்றத்தை நாடியது. அப்போது ஒன்றிய அரசின் அமைச்சராக இருந்த திரு. நட்டா அவர்கள்—வாதி சங்கல்ப் இயக்கம், RSS, பிரதிவாதி ஒன்றிய அரசு—இரண்டுபேரும் சேர்ந்து இதை நடத்த வேண்டுமென்று சொன்னவுடன் நாங்கள் நடத்துகிறோம் என்று சொன்னார்கள். இந்த NEET என்பது பா.ஜ.க. ஆட்சியில், பாரதப் பிரதமர் திரு. மோடி அவர்கள் ஆட்சியில்தான் கொண்டுவரப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) இது காங்கிரஸ் பேரியக்க ஆட்சியின்போது இல்லை. அதை, தயவு செய்து எடுங்கள். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். ஏற்கெனவே, Article 200-ல் ஆளுநரின் உரிமை என்ன, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் அவைக் குறிப்பில் இருந்தால்தான், உங்கள் பதில் இருப்பதற்கும் சரியாக இருக்கும். இரண்டும் இருக்கட்டும். நீங்கள், உரையை முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: சரி. Article 200-ல் ஆளுநரின் வரம்பு என்ன, Article 201-ல் குடியரசுத் தலைவருக்கு என்ன

[திரு. கு. செல்வபெருந்தகை] [2024 ஜூன் 28

பணிகள் ஆகியவற்றை பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள் அரசமைப்புச் சட்டத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். மாநில உரிமைகளைப் பற்றியும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஒன்றேயொன்றைச் சொல்லி உரையை முடிக்கிறேன். Modern Dental College Vs. Union Government of India வழக்கின் தீர்ப்பில் ஐந்து நீதியரசர்கள், குறிப்பாக, தமிழ்நாட்டை சேர்ந்த நீதியரசர் திருமதி பானுமதி அவர்கள் சொல்லியிருக்கிறார்; மாநிலங்களின் உரிமைகள் எந்தக் காலத்திலும் நீர்த்துப் போகவில்லை என்று. ஆங்கிலத்திலே சொல்கிறார்; The State's right is not denuded. ஏனென்றால் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதும் மாநில அரசு; பல்கலைக்கழகத்தைக் கொண்டுவருவதும் மாநில அரசு. அந்தப் பல்கலைக்கழகங்களில் மருத்துவ மாணவர்களைச் சேர்க்கும் உரிமை மாநில அரசுக்கு இருக்கிறது என்பதை உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் 5 பேர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தனித் தீர்மானத்தைக் காங்கிரஸ் பேரியக்கம் வழிமொழிகிறது. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீட் தேர்வைப் பொறுத்தவரையில், ஏழையெளிய மாணவர்களைப் பாதிக்கும் இந்தத் தேர்வினை, கடந்த காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதலமைச்சர்களாக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் தொடர்ந்து எதிர்த்து வந்தார்கள். இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், இரண்டு வழிகள் உண்டு. ஒன்று Legislative route, மற்றொன்று Judicial route ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், இந்தத் தேர்வு என்பது National Medical Commission Act என்கிற மத்திய அரசினுடைய சட்டத்தின் அடிப்படையில் நடைபெறுகின்ற காரணத்தினால், மத்திய அரசுச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் உறுதியாக தேவை என்பதை முதலில் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024 ஜூன் 28] [திரு. பால் மனோஜ் பாண்டியன்]

அதேபோன்று, நடைபெற்றிருக்கின்ற இந்த முறைகேட்டின் அடிப்படையில் உச்ச நீதிமன்றமே அதனைக் கவனத்தில் கொண்டு தற்காலிகமான தீர்ப்பாக இருந்தாலும், CBI investigation என்கிற விசாரணை நடைபெறுகிறபோது, நமது மாநில அரசும் மற்ற மாநில அரசுகளுடன் சேர்ந்து மைய அரசை வலியுறுத்தி, ஏற்கெனவே நீட் தேர்வை உறுதிப்படுத்திய தீர்ப்பினை மறு ஆய்வு செய்வதற்கு, மத்திய அரசும் review petition file செய்யலாம். மாநில அரசுகளும் அங்கே தாக்கல் செய்து, நடைபெற்றிருக்கின்ற முறைகேட்டின் அடிப்படையில் நீட் தேர்வு மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற அந்த சட்டரீதியான Judicial route-ஐயும் எடுக்கலாம் என்பதையும் தெரிவித்து, அதற்கு ஒன்றுதான் தேவை 'Evidence, to show that the examination process is fundamentally fraud' அதாவது அடிப்படையிலேயே நீட் தேர்வு என்பது ஒரு மோசடியான தேர்வு என்பதை எடுத்துரைத்தால் மறு ஆய்வு செய்யலாம் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானத்தை வரவேற்கின்றோம். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பலர் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். முதலில் இந்தத் தீர்மானத்தை நான் இங்கு எடுத்து வைப்பதற்கு அனுமதி வழங்கிய பேரவைக்கும், இந்தத் தீர்மானத்தினை வரவேற்று கருத்துகளைத் தெரிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. வி.பி. நாகைமாலி, திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், திரு. பால் மனோஜ் பாண்டியன், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய திரு. ஜி.கே. மணி ஆகியோர் எல்லோரும் உரிமையைக் காக்க வேண்டும் என்று மாநில உரிமைக்காகக் குரல் கொடுத்துப் பேசியிருக்கிறார்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் நீட் தேர்வினால்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2024 ஜூன் 28

ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புகள் குறித்தும், நீட் தேர்வினை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கமாகக் கூறி இந்தத் தீர்மானத்தை அவரும் வரவேற்றுப் பேசியிருக்கிறார். திரு. ஜி.கே. மணி அவர்கள் வேறொரு கூட்டணிக் கட்சியில் இருந்தாலும், அவரும் இதை வரவேற்றுப் பேசியதற்காக நான் மனப்பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல, நிச்சயமாக நீட் ஒழிப்புக்கான அத்தனை நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற உறுதியை இந்தத் தீர்மானத்தின் மூலமாகத் தெரிவித்து, இதை ஒருமனதாக நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள். (குறுக்கீடு) நாளை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நாளை வாய்ப்பு தருகிறேன். அரசினர் தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அடுத்த அலுவலுக்கு வந்துவிட்டோம். (குறுக்கீடு) நாளை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நாளை உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) நீங்கள் எல்லோருமே கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள்; அது ஆய்விலே இருக்கிறது. இன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும்